புதுச்சேரி அரசு.
போக்குவரத்துத் துறை
***

எண்: 41/TD/TC/PA/2016 புதுச்சேரி, தேதி: 08.01.2016

**27வது சாலைப் பாதுகாப்பு வாரம் - செய்திக் குறிப்பு**

நமது நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் பெருகி வரும் வாகன விபத்தின் மூலம் ஏற்படும் உயிரழப்பு, ஊனம் ஏற்படுதல், வாகனச் சேதம் ஆகியவற்றை குறைப்பதற்காக அனைத்து தரப்பினரிடமும் சாலை பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், சாலை பாதுகாப்பு வாரம் கடைப்பிடிக்கப்படுகிறது. இந்த ஆண்டு 10.01.2016 முதல் 16.01.2016 வரை 27வது சாலைப் பாதுகாப்பு வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நமது புதுச்சேரி யூனியன் ஆட்சிப் பகுதியிலும் வாகன ஓட்டுநர்களுக்கும் மற்றும் பொது மக்களுக்கும் சாலைப் பாதுாப்புத் தொடர்பான பயனுள்ள கருத்துக்களும், வழி முறைகளும் சென்றடையும் வகையில் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

சாலைப் பாதுகாப்பு வார நிகழ்ச்சிகளின் அங்கமாக, வாகன ஓட்டுநர்களுக்கு 11.01.2016 மற்றும் 12.01.2016 காலை 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கண் பரிசோதனை, செவி பரிசோதனை, மருத்துவ பரிசோதனை முகாமும் புதுச்சேரி சாலை போக்குவரத்துக் கழகத்தின் வளாகத்தில் நடைபெற உள்ளன.

13.01.2016 அன்று பொது மக்களுக்கு சாலைப் போக்குவரத்து விழிப்பிணர்வை ஏற்படுத்தும் வகையில் போக்குவரத்து துறையின் மூலம் கடற்கரை மற்றும் சோதனைச் சாவடிகளில் சாலை பாதுகாப்பு கையேடுகள் வழங்கப்பட உள்ளன. அன்று மாலை 5.00 மணி அளவில் சாலைப் பாதுகாப்பை வலியுறுத்தும் வகையில் காவல் துறை நடத்தும் தலைக் கவசத்துடன் இரு சக்கர வாகன அணிவகுப்பு கடற்கரை காந்தி சிலை அருகில் தொடங்கி நடைபெறும்.

அனைத்து துறையிலும் பணியாற்றும் வாகன ஓட்டுனர்களுக்கும் நடத்துனர்களுக்கும் 18.01.2016, 19.01.2016 மற்றும் 20.01.2016 அன்று 9.00 மணி முதல் மதியம் 1.00 மணி வரை கண் பரிசோதனை, செவி பரிசோதனை, மருத்துவ பரிசோதனை முகாம் உழவர்கரை வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் (அரசு வாகன பணிமனை வளாகத்தில்) நடைபெறும்.

20.01.2016 மாலை 5 மணி அளவில் போக்குவரத்துத் துறை, காவல் துறை மற்றும் NSS அமைப்பினர் மூலம் சுதேசி பஞ்சாலை அருகிலிருந்து சாலைப் பாதுகாப்பு விழிப்புணர்வு நடை பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாலை பாதுகாப்பு வார விழாவை ஒட்டி, "சாலை பாதுகாப்பு - செயல்பாட்டுக்கான நேரம் இதுவே" என்ற தலைப்பில் மாணவர்களுக்காக கட்டுரை போட்டி நடத்த பள்ளி கல்வி மற்றும் உயர் கல்வித் துறையிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சாலை பாதுகாப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் புதுச்சேரி அரசு மாநில அளவிளான சாலை பாதுகாப்பு கொள்கை மற்றும் செயல் திட்டத்ததை அறிவித்துள்ளது. இதனை பொது மக்கள் அரிந்து கொள்ளும் வகையில் போக்குவரத்துத் துறையின் வளைதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

GOVT. OF PONDICHERRY
TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்

**GOVERNMENT OF PUDUCHERRY**
**TRANSPORT DEPARTMENT**
***

NO. 41/TD/TP/2015/1 Puducherry, dated 08.01.2016

**27th Road Safety Week**
**PRESS NOTE**

As the number of road accidents, injuries and fatalities are increasing every year in the country, so as to create awareness among all citizens and to reduce the incidents of road accidents, Road Safety Week is observed. This year it is proposed to observe the 27th Road Safety Week from 10.1.2016 to 20.1.2016 on the theme **"Road Safety – Time for Action"**.

As part of observance of Road Safety, it is proposed to conduct various programmes

On 11.01.2016 and 12.01.2016 an Eye Camp, Ear Camp and Medical Check-up has been arranged in the PRTC premises for the benefit of Drivers and Conductors. During these days there will also be distribution of Pamphlets near Beach Road and Check-posts to create Road Safety Awareness to the general public.

On 13.01.2016, the programme of pasting the traffic awareness stickers has been arranged in the premises of New Bus Stand. On the same day helmet rally will also be organized by Police Department at Gandhi Statue of Beach Road.

On 18.01.2016, 19.01.2016 and 20.01.2016 forenoon a special Eye Camp, Ear Camp and Medical check-up for Government Drivers and conductors has been arranged by Health Department at RTO Office, Oulgaret (GAW Campus, Saram, Puducherry).

On 20.01.2016 evening a Walkathon has been arranged by Transport Department, Traffic Police and NSS Volunteers at Swedeshi Cotton Mill.

The Department of School Education and Department of Higher and Technical Education have been requested to conduct Essay Competition on the theme **"Road Safety – Time for Action"** in Schools and Colleges.

The Government of Puducherry in order to give importance to road safety has also come out with the State Level Road Safety Policy and Action Plan and the same has been hosted in the website of Transport Department for the general information of the public.

**(S.D. SUNDARESAN)**
**TRANSPORT COMMISSIONER**

GOVT OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★